தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

வ.எண்	நேரம்	இடம்
1.	காலை 9,30	கன்னிவாடி
2.	காலை 10,15	வடுகபட்டி
3.	காலை 11,00	கணபதிபாளையம்
4.	காலை 11,45	தளவாய்பட்டணம்

மதிய உணவு இடைவேளை

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 3,30	பெரியார் சிலை
2.	மாலை 4,15	அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு)
3.	மாலை 5,00	பூளவாடி ரோடு கார்னர்

தேர்தல் பணிக்குழு

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் முன்னிலை! பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - தொடர் பிரச்சார நிகழ்ச்சிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

தொகுதி இடைத்தேர்தல் பொறுப்பாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!



மதுராந்தகம்,செப்.29-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குள த்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 7, 9, 33, 34, 35, 36, 37, 38, 57, 58 ஆகிய 10 பாகங்களில் மேற்கொள்ளப்படவுள்ள தேர்தல் பணிகள் மற்றும் தொடர் பிரச்சார நிகழ்ச்சி கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மேற்கண்ட ஊராட்சிகளில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிக்கும் வகையில் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தரும் தேசிய முற்போக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் பிரச்சார நிகழ்ச்சி குறித்தும்;

30.09.2026 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் கருங்குழியில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொள்ளும் மகளிர் சந்திப்பு நிகழ்ச்சி குறித்தும்;

01.10.2026 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பங்கேற்கும் பிரச்சாரப் பொதுக் கூட்டம் குறித்தும்;

03.10.2026 சனிக்கிழமை மாலை மதுராந்தகத்தில் நடைபெறும் கழகத் தலைவர் அவர்களின் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், நட்சத்திரப் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 பாகங்களிலும் பொதுமக்களை ஓரிடத்தில் திரட்டி, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளையும், தற்போதைய ஆட்சியின் 100 நாள் வேதனைகளையும் எடுத்துரைத்து வாக்கு சேகரிக்கும் வகையில் தொடர் பிரச்சார நிகழ்ச்சிகளை நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அதன்படி, 29.09.2026 செவ்வாய்க்கிழமை மாலை, 30.09.2026 புதன்கிழமை காலை, 01.10.2026 வியாழக்கிழமை காலை, 02.10.2026 வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் மற்றும் 04.10.2026 அன்று மாலை பிரச்சார நேரம் நிறைவடையும் வரை, பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரிக்கும் பணிகளை மேற்கொள்வது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இவ்வாலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்யசாய்நாதன், ஒன்றிய அவைத்தலைவர் எம்.எஸ்.ஆறுமுகம், ஒன்றிய துணைச் செயலாளர் திருஞான செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு எம்.எல்.ஏ. அவர்கள் கலந்துகொண்டு, தேர்தல் பணிகள் மற்றும் தொடர் பிரச்சார நிகழ்ச்சிகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தேமுதிக மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், கூ.பீ.ஜெயின், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.சாமிக் கண்ணு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன் மற்றும் சரிதா மகேஷ் குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ரஞ்சித் நா.விஜயாலயன், எல்.பி.எஃப். மோகன், எம்.சரவணன், கு.கிருஷ்ணமூர்த்தி, லண்டன் க.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப் பட்டு, நெல்லி, குன்னங் குளத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட 10 பாகங்களின் பொறுப்பாளர்களான சித்ரா, இ.தினேஷ், கே. மணிகண்டன், எம்.எச்.காமராஜ், சி.வெங்கடேசன், பத்தன் அருள்ராஜ், டி.ஜி.எம். பெருமாள், பி.தாண்டவராயன், பி.பார்த்திபன், சத்தியராஜ், ஜெயபால், விஜயகுமார், உதயகுமார், ராஜேந்திரன், வாசுதேவன், து.கணேசன், வேலு, சக்கரபாணி, முத்து, சி.சுந்தரவரதன், பிரதாப், மதன்பால், நாகராஜன், நாகப்பன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; சட்டசபையில் எம்.எல்.ஏ.க்கள் கேட்டிருந்த 14,399 கேள்விகளுக்கு இதுவரை 1800க்குத்தான் பதில் வந்திருக்குதாமே!

போண்டி : ஆமாய்யா, நானும் ஒரு பேப்பர்ல அதை படிச்சேன்யா. எவ்ளோ 'ஸ்லோ' இதைத்தான் 'குதிரை வேக' அரசுன்னு சட்டசபையிலே விஜய் பதிவு செய்தாரோ!

மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

ஏறுப்பாக்கம் கிராமத்தில் பல்லாவரம் இ. கருணாநிதி திண்ணைப் பிரச்சாரம்!

பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை - இ.எஸ். பெர்னார்ட் தலைமையில்!

பல்லாவரம், செப்.29-

மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்டகிணார் ஊராட்சி பாகம் 91 இல் ஏறுப்பாக்கம் ஊர் கிளை மற்றும் ஆதிதிராவிடர் கிளை பகுதிகளில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பல்லாவரம் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள், மகளிர் அணியைச் சேர்ந்த தாய்மார்கள் 200க்கு மேற்பட்டவர்களுடன் கழக இரு வண்ணக் கொடி கழக வேட்பாளர் ஆதரித்த பதாகைகள் உதயசூரியன் படம் மேளதாளங்கள் முழங்க வீடு வீடாக சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து, கழக கழக அரசு செய்த பல்வேறு சாதனைகளான மகளிர் உரிமைத்தொகை, நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி மருத்துவம், இன்னொரு காக்கும் 48, மகளிர் மகப்பேறு திட்டம் போன்ற பல்வேறு சாதனைகளை விளக்கியும் ஊராட்சி பகுதி முழுவதும் அருமையான சாலைகள் மழைநீர் கால்வாய்கள் மேம்பாலங்கள் போன்ற மக்கள் நல திட்டங்களையும் எடுத்துரைத்து திண்ணையில் அமர்ந்து இத்தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கட்சி மாறியதால் திணிக்கப்பட்ட ஒரு இடைத் தேர்தலை நாம் சந்திக்க வேண்டிய நிலைமை வந்துள்ளது ஆகவே நீங்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார்.

பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் மதுராந்தக தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜெ.அரசு மற்றும் பல்லாவரம் பகுதி கழக நிர்வாகிகள்கோ, ஜானகிராமன் ச.சிவக்குமார், க.ரமேஷ், கோ.கருணாமூர்த்தி, டி.கே.கார்த்திகேயன், எஸ். மணிரத்தினம், எல்.ஆர்.சதீஷ்குமார், ஜிஎஸ்டி.தேவாராஜ், பி.கிஷோர், கிணார் ஊராட்சி, கிளைக் கழகச் செயலாளர்கள் வி.வேலாயுதம், கே.உதயகுமார், எம்.பழனிசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி. எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

நாள் : 30.09.2026

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 4.00 மணி	கருங்குழி – மகளிர் சந்திப்பு
2.	மாலை 5.00 மணி	மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம்
3.	மாலை 6.00 மணி	சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம்
4.	மாலை 7.00 மணி	பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம்
5.	இரவு 8.00 மணி	கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்)

``அண்ணா அறிவாலயம்''
சென்னை18.
நாள்: 25.09.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் கோவிந்தாபுரம் பகுதியில் பரப்புரையில் ஈடுபட்டார்.



மதுராந்தகம் தொகுதி இடைதேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வேட்டூர் ஊராட்சி சாலையூர் பகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.